எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
ரப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்டோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a News paper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [29-12-67] இதழ் ~~320~~ 3?9
யாழ்ப்பாணம்பிலவங்க மார்கழி 14 ரம்மான் 26 வெள்ளிக்கிழமை

மில்க் வைற்
நீலசோப் 20 சதம்


மட்டுமே கொடுத்து அதிக லாபமடையுங்கள். பொங்கும் நுரைவளம் அதிக உடுப்புகளைச் சலவை செய்ய உதவுகிறது. எவ்வளவு நாள்பட்ட அழுக்கானாலும் ஆச்சரியப்படத்தக்க முறையில் சுத்தம் செய்கிறது.

### யாழ்ப்பாண மாவட்டத்தில்

# வெங்காயம்: கட்டுப்பாட்டு விலையை நீக்க கோரிக்கை

## யாழ். மாவட்ட இணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஈரவெங்காயத்துக்கு விதிக்கப்பட்டுள்ள. கட்டுப்பாட்டு விலையை ரத்துச் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோருவதென யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் குழு தீர்மானித்திருக்கிறது.

யாழ். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் செயலக மகாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் மற்றும் காரியாதிகாரிகள், இ.ரா. அரசாங்க இலாகா தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சமீபத்தில் பெய்தமழையினாலும் அதனால் ஏற்பட்ட வெள்ளத்தினாலும் வெங்காயச் செய்கைக்கு ஏற்பட்ட சேதம் பற்றியும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

வெங்காயத்துக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ந்தும் கட்டுப்பாட்டு விலை அனுசரிக்கப் பட்டால் விதை வெங்காயத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடுமென்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் வெங்காயத்தின் கட்டுப்பாட்டு விலையை ரத்துச் செய்ய வேண்டுமெனக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### ஆஸி - இந்திய 'டெஸ்ட்' கிரிக்கெட்

## முதல் 'டெஸ்ட்' போட்டியில் இந்தியா தோல்வி

அடிலயிட், டிச. 28

இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையில் நடைபெற்ற முதல் கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் முதல் போட்டியில் இந்தியாவை 146 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றிகொண்டது.

போட்டி முடிவடைய வேண்டியதற்கு ஒருதினம் முன்னதாகவே விளையாட்டு முடிவடைந்தது. இன்று காலை ஆட்டம் தொடங்கியதும் இந்தியக் கோஷ்டியின் விக்கட்டுகள் மளமளவெனச் சரியத் தொடங்கியது. ஆட்டம் முடிந்த போது பிரசன்னா மட்டும் 18 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமலிருந்தார்.

### ஸ்கோர் விபரம்

**முதல் இன்னிங்ஸ்**

ஆஸ்திரேலியா - 335 ஓட்டங்கள்
இந்தியா 307 ஓட்டங்கள்.

**2-வது இன்னிங்ஸ்**

ஆஸ்திரேலியா - 369 இந்தியா - 251.

### யாழ்ப்பாணத்தில்

# உணவுப்பொருள் தட்டுப்பாடு அடுத்தமாதம் முதல் நீங்குமாம்

## உணவுகட்டுப்பாட்டு அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதியில் இப்போது உணவுப்பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து படிப்படியாகக் குறையும் என உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மல்லி, மிளகாய், பால் உணவு வகைகள் ஆகியவற்றுக்கான தட்டுப்பாடு பெருமளவில் நீங்கும் என அவர் மேலும தெரிவித்தார்.

வடபகுதி உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எம். வீரசிங்கம் இதுபற்றி நமது நிருபரிடம் தெரிவிக்கையில் யாழ்ப்பாண மக்களுக்கு ஒவ்வொரு மாதமும் தேவைப்படும் பால்மா உணவு வகைகளும் மல்லி, மிளகாய் போன்ற உபஉணவுப்பொருள்களும் இறக்குமதி செய்யப்பட்டபோதும் பலர் தமது தேவைக்கு மிஞ்சி, தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் காரணமாக இப்பொருள்களை சேர்த்துவைப்பதாலேயே உண்மையில் தட்டுப்பாடு ஏற்படுவதாகத் தெரிவித்தார்.

இவ்வித தட்டுப்பாடு நிலைமை ஏற்படுவதற்கு சில வர்த்தகர்கள் முக்கிய பொறுப்பாகவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்விதம் சில இடங்களில் அத்தியாவசியப் பொருள்கள் முடக்கப்படுவதால் நோயாளிகள், குழந்தைகள் ஆகியோர்கூட தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியாத பரிதாப நிலை ஏற்பட்டுவருவதாகவும் அவர்எடுத்துக்கூறினார்.

### தடுக்கவழி

இவ்வித நிலையைத் தடுக்க அடுத்த மாதம் முதல் தீவிர நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரிவித்த உணவுக்கட்டுப்பாட்டு உதவி அதிகாரி அடுத்த மாதம் இப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படும்பொழுது பாவனையாளர்களுக்குத் தட்டுப்பாடின்றி இப்பொருட்கள் கிடைக்க ஐக்கிய பண்டகசாலைகள் மூலம் இவற்றை விநியோகிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமென்றும் இதனால் அத்தியாவசிய பொருள்கள் முக்கியமாகத் தேவைப்படும் நோயாளர்கள், பிள்ளைகள் ஆகியோருக்கு இவை அப்போது கிடைக்குமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

(வி. நி)

— —

## அடுத்தமாதம் தேர்தல்

### இருபட்டினசபைகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் பட்டினசபையின் தேர்தல் அடுத்தமாதம் 18-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

சாவகச்சேரி பட்டின சபைக்கு புதிய அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் அடுத்த மாதம் 21-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

இருபட்டினசபைகளின் தேர்தலிலும் போட்டியிடும் அபேட்சகர்களும் வாக்குத் [illegible]

## நல்லூருக்கு குழாய்மூலம் குடிநீர்

### உதவி ஆணையாளர் ஆரம்பித்துவைத்தார்

யாழ்ப்பாணம், வியா.

நூற்றுக்கணக்கான ஹரிஜன மக்களுக்கு குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்கும் இப்புதிய குழாய்நீர் விநியோகத்தை ஆரம்பித்து வைப்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ஹரிஜன மக்கள் சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்தால் சமத்துவ வாழ்வைப் பெறக் கூடியதாகவிருக்கும்.

திருநெல்வேலி 6-ம் வட்டாரத்துக்கான குழாய்மூலமான குடிநீர் விநியோகத்தைஆரம்பிவைத்த உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லூர் கிராம சபைத் தலைவர் திரு. பொ. குமாரகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. மாணிக்கவாசகர் மேலும் கூறியதாவது:

இப்புதிய தண்ணீர் விநியோகத்திட்டத்துக்கு யாழ்ப்பாண மாநகரசபை 25 ஆயிரம் ரூபா செலவு செய்துள்ளது. காலப்போக்கில் இத்தண்ணீர்த்திட்டம் குடிநீர்க் கஷ்டமுள்ள பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

நல்லூர் கிராம சபைத் தலைவர் திரு. பொ. குமாரகுலசிங்கம் உட்பட பலர் இப்புதிய தண்ணீர் விநியோகத்தின் பலாபலன்களைப் பற்றிப் பேசினார்கள்

(வி. நி.)

## 'இடமாற்றம் சரியானதே'

கண்டி, வியாழன்

அகில இலங்கையிலும் தமிழ் மாணவர் தமிழ் மொழி மூலம் கல்வி கற்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் கொள்கையை ஆதரித்து அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குக் கல்வி அமைச்சர் ஒரு திட்டத்துடன் ஒழுங்கு செய்த 1-1-68 ஆசிரிய இடமாற்றத்திட்டம் செயல்படும் வகையில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்குமாறு வட இலங்கை ஆசிரியர்களை கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் மத்திய மாகாணக் கிளைத்தலைவர் திரு. கா. மதியாபரணம் சங்கச்சார்பில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ்வித இடமாற்றத்தால் அகில இலங்கையிலுமுள்ள தமிழ் மாணவர்கள் நன்மை பெறுவார்களென்றும் இடமாற்றம் சரியானதேயென்றும் மேலும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வித இடமாற்றத்தால் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்து வேலையற்றிருக்கும் மாணவர்கள் சிலருக்கும் வேலை கிடைக்குமெனவும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தன்னுடைய மனிதத் தன்மையை உணர்ந்து விட்ட ஒரு மனிதன் கடவுளுக்கு மாத்திரமே பயப்படுவான். வேறு யாருக்கும் அஞ்சமாட்டான். —காந்திமகான்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 14ம் திகதி [29-12-67]

# சீன அணு ஆயுத பரீட்சை

நவசீனு மற்ரெரு அணுகுண்டையும்வெடித்து பரீட்சைசெய்திருக்கிறது. இது சீனுவின் ஏழாவது அணுகுண்டு. சீனு வெடித்துப் பரீட்சித்த ஆறு அணுகுண்டுகளைவிட இந்த ஏழாவது குண்டுதான் மிக மோசமானதென்றும் இக் குண்டுப் பரீட்சையிலிருந்து வெளிவந்த அணுவிஷக் கதிர் ஜப்பான் நாட்டில் விழுந்திருப்பதுடன் ஐரோப்பா, அமெரிக்காவுக்கும் பரவுமாம். அமெரிக்க அணுவிஞ்ஞானிகள் இவ்வாறு அச்சம் தெரிவித்துள்ளனர். அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதனுலும், அவற்றை வெடித்துப் பரீட்சிப்பதனுலும் ஏற்படக்கூடிய ஆபத்தான, பயங்கரவிளைவுகளை நன்கு உணர்ந்தபின்னரும் இது போன்ற விஷப் பரீட்சைகள் நடைபெறுவதுதான் புரியாமலிருக்கிறது.

சீனு அணுஆயுதங்களை உற்பத்திசெய்வதும் அவற்றைப் பரீட்சிப்பதும் மட்டும்தான் சிலருக்குத் தவருகவும் குற்றமாகவும் தெரிகிறது. சீனுவாக இருந்தாலும் சரி, அமெரிக்காவாக இருந்தாலும்சரி வேறு எந்த நாடாக இருந்தாலும் சரி அணுஆயுதங்களை உற்பத்திசெய்வதும் அவற்றைப் பரீட்சித்து விஷக் கதிர்களை பரப்புவதும் மனிதகுலம் மன்னிக்கக்கூடியதல்ல.

அமெரிக்காவும், ரஷ்யாவும் அணுஆயுதங்களை போட்டிபோட்டு உற்பத்தி செய்ததுடன் அவற்றை வெடித்துப் பரீட்சித்துவந்தன. அப்போதும் இதே ஆபத்து ஏற்படத்தான் செய்தது. அணுஆயுத உற்பத்தியை நிறுத்தும்படியும் பரீட்சைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும்படியும் உலகநாடுகள் குரல் கொடுத்தபோது அவ்விருவல்லரசுகளும் செவிசாய்க்கவில்லை. பெருமளவில் அணுஆயுதங்களை உற்பத்திசெய்து, அவற்றைப் பரீட்சித்து குவித்து வைத்துக்கொண்டபின் இதர நாடுகள் அணுஆயுதங்களை உற்பத்தி செய்யக்கூடாதென்றும் பரீட்சிக்கக் கூடாதென்றும் கூறுவதில் நியாயம் உண்டு என்று சொல்ல முடியுமா?

நிலத்துக்கடியில் மட்டும் பரிசோதனைசெய்ய அனுமதியளிக்கும் ஓரளவு அணுஆயுதப்பரிசோதனைத்தடை ஒப்பந்தத்தில் சீனுவும், பிரான்சும் கைச்சாத்திடவில்லை. ஐ. நா. வில் அங்கம்வகிக்கும்பிரான்ஸ் நாடே, ஐ. நா. வின் முயற்சியினுல் செய்து கொள்ளப்பட்ட அந்த ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட மறுத்துவிட்டது. ஐ. நா. வில் அங்கத்துவம் மறுக்கப்பட்டு வரும் நவசீனு, அந்த ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட மறுப்பதில் ஆச்சரியமில்லை.

அணுஆயுத உற்பத்தியையும் அதன் பரீட்சைகளையும் நிறுத்தவேண்டுமானுல் இந்த பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்து குவித்துவைத்திருக்கும் அரசுகள், அந்த ஆயுதங்கள் அனைத்தையும் ஐ. நா. வின் பொறுப்பில் ஒப்படைத்துவிட வேண்டும். அதேசமயம் சீனுவையும் ஐ. நா.வில் சேர்த்து அதன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அணுஆயுத உற்பத்தியையே நிறுத்த முயற்சிசெய்ய வேண்டும். இதுவே அணுஆயுத அச்சத்தை நீக்குவதற்குள்ள சாத்தியமான ஒரேவழி.

# "சமாதானத்தின் சாதகமாக யோகம் விளங்குகிறது"

## யாழ்ப்பாணத்தில் யோகாசன நிபுணர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புடைய விஞ்ஞானமாகவும், மனதின் தெளிவையும் அழகையும் நுகரச் செய்கின்ற கலையாகவும் எல்லாங்கடந்த கடவுளின் அடியை அடையக் கூடிய தத்துவப் பாதையாகவும் விளங்குவது யோகமாகும். காலநியதியும் வான் முறையும், சீலமும் பொருந்த எந்த உடல்யோகத்தில் பயிற்சி பெற்று வருகின்றதோ அதுகடவுள்—இருப்பிடமாக அமைந்து சிறப்படைவதோடு பெறுதற்கரிய பேரின்பக்கதவுகளையும் திறந்துவிடும் இன்று மக்கள் விரும்புகின்ற உலக சமாதானத்தின் சாதகமாகவும் யோகம் விளங்குகின்றது.

இவ்வாறு யோகாசன நிபுணர் திரு எஸ். கே. ஐயங்கார் புதன்கிழமை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் யோகாசனப் பயிற்சிகசெய்துகாட்டுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையத்தினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த யோகப்பயிற்சியைக் காண பெருந்தொகையானேர் திரண்டிருந்தனர். பல்வேறுபட்ட யோகாசனப்பயிற்சிகளையும் அவர் செய்துகாட்டினுர்

யோகாசனம் பற்றி திரு. ஐயங்கார் மேலும் குறிப்பிட்டதாவது:

யோகாசனப் பயிற்சியை முறையாக விடாமல் செய்துகொண்டுவரும் ரிஷிகள அடுத்தவனின் இருதயத்தை அப்படியே அறிந்து கொள்ளக்கூடியவராவர் அத்தோடு சிந்தையை அடக்குகின்ற ஆற்றலையும் பெறுவான்.

பரிசுத்தமான வாழ்க்கையை மேற்கொள்ளவும இறைவனை அடையவும் யோகாசனம் சிறந்த சாதனமாகும்.

உடலை நல்ல நிலையில் வைக்கவும், உள்ளத்தை செம்மையாக்கவும், உயரிய தத்துவத்தை மேற்கொள்ளவும் யோகப்பயிற்சி வழி வகுக்கும்.

கடவுள் இருப்பிடமாக நமது காயத்தை ஆக்கும் போது ஆசைகளினுல் விளைகின்ற துர் நிகழ்ச்சிகளைத் தடுக்கலாம். யோகாசனம் இத்தகைய அடக்க சக்தியைத் தருவதாகும்.

உடலில் பல்வேறுபட்ட ரோகங்கள் ஏற்படுகின்றன. இன்றைய விஞ்ஞானத்தால் தீர்க்க முடியாத அந்த ரோகங்களை பிராணுயாமம் முதலிய பயிற்சிகளினுல் அகற்றிவிடமுடியும். நாடிப் பிசகினுலேயே நோய்கள் ஏற்படுகின்றன. பிராணுயாமம் சிறந்த ஔடதமாகும். இதனுல் மனமும் அடங்குகிறது.

யோகாசனத்தில் பல்வேறுபட்டமுறைகளுள. மனதைச் சலனமில்லாது வைத்திருக்க குருவிடம் பயிற்சி பெறவேண்டும். யோகப் பயிற்சியின்போது ஆரம்ப நிலையில் உடலில் வருத்தம் தென்படுவதாகப்படினும் பயிற்சியின் பேருகக் காலப் போக்கில் அது சௌகரியமானதாக ஆகிவிடும்.

திரு. ஐயங்காரின் யோகாசனத்துக்கு முன்னுரையாக திரு அம்பிகைபாகன் கூறியவை பின்வருமாறு:-

யோகாசனம் என்பது மனித வாழ்வுக்கு மிகமிக அத்தியாவசியமான பயிற்சியாகும். உடலைச் சுத்தமாகவும் தைரியமாகவும் வைத்திருப்பதற்கு சகல பயிற்சிகளிலும் யோகாசனப் பயிற்சி ஆதாரமானதாகின்றது.

ஆத்மீக வாழ்வுக்கு அடிப்படையான யோகப்பயிற்சியினுல் மனமும் உடம்பும் சுத்திகரிக்கப் படுகின்றது. இதுவே உண்மைச் சமய வாழ்க்கையாகும் சமய வாழ்வின் அடிப்படையும் யோகத்திலேயே உள்ளது.

சிந்தையை அடக்கி சிவத்தைக் காண்கின்ற சிறப்புக்கு வித்தாக அமைவதும் இதுவே, (நி)

## இன்றைய பலன்

[29-12-67]

வெள்ளிக்கிழமை

மார்கழி மீ 14 வ

நட்சத்திரம்- அனுஷம் காலை 8-54 மேல் கேட்டை

திதி- திரயோதசி பி.ப. 1-40 மேல் சதுர்த்தசி

சுபநேரம்- 6-29—7-59.

ராகுகாலம்- 10-59—12-29.

மேஷம்- கடினசிந்தை, காரியதாமதம்.

ரிஷபம்- தங்கக்குணம், தரத்திலும் உயர்வு.

மிதுனம்- வேண்டாத நட்பால் விபரீதம் விளையும்.

கடகம்- இனத்தோடு தொடர்பு, நிம்மதி பிறக்கும்.

சிங்கம்- வியாபார விருத்தி, இருப்பிட மாற்றம்.

கன்னி- நல்வரவு, நகைச்சுவையுண்டு.

துலாம்- மந்தநிலை, மறதிக்குணம்.

விருச்சிகம்- புண்ணிய விருப்பு, தியாக உள்ளம்.

தனுசு- நல்லசமயத்தை நழுவவிடாதே.

மகரம்- கனல் வீசும் பார்வை, கவனித்து நட.

கும்பம்- வாகன சுகம், வரவில் முன்னேற்றம்.

மீனம்- மைந்தரால் மகிழ்ச்சி, மனம்போல் வாழ்வு.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

# இந்திய இசைவிழாவில் இலங்கை - இசைக்கலைஞர்

சென்னை நகரில் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இசை விழாக்களில் சரித்திரத்திலேயே முதல் முறையாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகசுரக் கலைஞர்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக இலங்கை தவில் வித்துவான்கள் இசை விழாக்களில் கலந்துகொண்டனராயினும் இலங்கை நாகசுரவித்துவான்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்படவில்லை. இக் குறையைப் போக்கும்வகையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகசுரவித்துவான் திரு. என். கே. பத்மநாதன் குழுவினருக்கு இவ்வாண்டு இசைவிழாக்களில் முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

இன்று பிற்பகல் 1-30 மணிமுதல் சென்னை மியூசிக் அகாடமி இசைவிழாவில் "நாகசுரகான கலாநிதி" திரு. என். கே. பத்மநாதன் குழுவினரின் நாகசுரக் கச்சேரி நடைபெறுகிறது. இந்தஇசைக்குழுவில் கோண்டாவில் வி. எ. பாலகிருஷ்ணனும், அளவெட்டி திரு. வி. என். குமரகுருவும் பங்கு கொள்கிருர்கள். விசேடமாக "ஜதீஸ்வரஞான கலியுக நந்தீஸ்வர மேதை" வலங்கைமான் திரு. ஏ. சண்முகசுந்தரம்பிள்ளையும் கலந்துகொள்கிருர்.

[அள. நி.]

## கண்வைத்தியர் இலவச சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதியில் கண்சம்பந்தமான வியாதிகளைப் பரிசோதித்து ஆலோசனை வழங்கவும், கண் பார்வை குறைந்தவர்களுக்கு எத்தகைய கண்ணுடி பாவிக்கவேண்டுமென்று சிபார்சு செய்யவும் கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். ஆனந்தராஜன் முன்வந்துள்ளார்.

இவர் தமது சேவையை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்க யாழ்ப்பாணப் பட்டினத்தின் பல்வேறு பகுதிகளிலும் தனது உதவியாளர்களுடன் முகாமிட்டு [illegible] வருகிருர். [நி]

## நாட்டிலும் நகரிலும்

சாயைக்கிரகங்கள் என்று கூறப்படும் இராகுவும் கேதுவும் இம்மாதம் மேட இராசியிலிருந்து மீன ராசிக்கு மாறுகிருர்கள். பஞ்சாங்கம் கணிப்பவர்கள் இம்மாற்றத்துக்கு வெவ்வேறு திகதிகளை கூறுகிருர்கள். ஆகையினுல் திட்டவட்டமாக எத்திகதி என்று கூறமுடியாமலிருக்கிறது. என்ருலும்இவ் வித்தியாசம் ஒரு மாதத்துக்கு மேற்படாது.

சுமார் ஒன்றரைவருடங்களுக்கு ஒருக்கால் இராசி மாறும் இந்த பாபகிரகங்கள் சிலருக்கு நன்மையும், சிலருக்குத் தீமையும் உண்டு பண்ணும் என்று சோதிடர் கூறுவர்.

இராகுவும் கேதுவும் மற்றைய கிரகங்களான புதன், சுக்கிரன், வியாழன், சனி இவை போல உருப்படியானவையல்ல. அவற்றிற்கு உருவம் கிடையாது. வான வெளியில் ஒரு குறிப்பிட்ட இடத்தையே அவை குறிக்கின்றன. ஆயினும் அவற்ருல் பூமியில் வாழும் மக்களுக்கு நன்மையான காரியங்களும் தீமையான காரியங்களும் நடக்கின்றன என்று கூறப்படுகிறது.

சிலருக்கு சோதிடத்தில் நம்பிக்கை உண்டு, சிலருக்கு இல்லை.

ஆனுல் வான சாஸ்திரத்தையும். வானவெளியில் பவனிவரும் கோள்களின் திசை மாறுதல்களையும் பல் நூற்ருண்டுகளாக கவனித்து அவற்றை நுணுக்கமாகப் படித்து வந்த பல சாஸ்திரிகள் வான வெளிக்கோள்கள் நிச்சயமாகபூமிவாசியாகியமனிதனின் குணதிசயங்களையும் அதனுல் அவனுடையவாழ்க்கையையும் பாதிக்கின்றன என்று நிச்சயமாக நம்புகிருர்கள்.

உதாரணமாக அவர்கள் கூறும் ஒரு விஷயத்தை நாம் முற்ருக மறுப்பதற்கில்லை. அதாவது, பூமிக்கு மிகவும் நெருங்கிய கோளமாகியசந்திரன்நம்மீதுபிரயோகிக்கும் சக்தி, அமாவாசை, பௌர்ணமி, அட்டமி-நவமி ஆகிய திதிகளில் பூமியில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் நடக்கின்றனவென்பதை கூர்ந்து கவனிப்பவர் எவரும்மறுக்க முடியாது.

இத்திதிகளில் காலநிலை மாறுவதையும், கடல்கொந்தளிப்பதையும், சிருஷ்டிதொழில் நடைபெறுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

மீன்முதலிய உயிரினங்கள் இத்தினங்களில் சூல்பெற்றிருப்பதால் அத்தினங்களில் மீன் பிடிக்கலாகாது என்று ஜப்பான் போன்ற நாடுகளில் கட்டளையுண்டு.

பெண்கள் பருவமடைவதும் கர்ப்பமடைவதும்பிரசவிப்பதும் இந்நாட்களில் தான் நிகழுகின்றன என்பதையும் நாம் பிரத்தியட்சமாகக் காண்கிருேம்.

சின்னஞ்சிறு சந்திரன் இப்படி பூமியைப் பிடித்து ஆட்டிவைக்குமானுல் அதைவிட பன்னூறு மடங்குபெரியவையான சூரியன், வியாழன், சனி முதலிய கோள்களும் ஏன் பூமியைப்பாதிக்க மாட்டா என்று சோதிடஞானிகள் வாதாடுவார்கள்.

சமீபத்தில் சமுத்திரத்தில் மறைந்த ஆஸ்திரேலியப் பிரதமர் ஹோல்ட்டின் சடலத்தை தாம் கண்டுபிடித்துத் தருவதாக நாகபுரி சோதிடர் ஒருவர் ஆஸ்திரேலிய அரசாங்கத்துக்கு எழுதியுள்ளார். பிரதமர் மறைந்த திகதி, நேரம்முதலியவற்றைக்கொண்டு இது சாத்தியமாகும் என்றுஅவர் கூறுகிருர்.

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத்தொடர்ச்சி)

இலங்கையிலுள்ளவர்களுக்கு சோதிடத்தில் அபார நம்பிக்கையுண்டு என்று சொல்லவேண்டியதில்லை. நமது அரசாங்கத் தலைவர்களே, டட்லியும்சரி சிறிமாவும்சரி, சோதிடர்களைக் கலந்தாலோசித்த பின்னரே எந்த முக்கியமான நடவடிக்கையிலும் இறங்குவர்கள். நாடாளுமன்றக் கூட்டம், கலைப்புப் போன்றனவும் சுபசகுனம் பார்த்தே நடக்கின்றனவாம்.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஈமன் குடியரசில் தீவிர உள்நாட்டுப் போர்

சாளு, டிச. 28

புதிய தெற்கு ஈமன் குடியரசில், உள்நாட்டுப்போர் தீவிரமடைந்துள்ளது. முடியரசு வாதிகளுக்கும் பதவியிலிருக்கும் குடியரசுவாதிகளுக்குமிடையே அங்கு சண்டை நடந்துவருகிறது.

அருகிலுள்ள மலைப்புறங்களிலிருந்து முடியரசுவாதிகள் நாட்டின் தலைநகரான சாளுமீது தாக்குதல் நடத்தி வருகிறார்கள். நாட்டின் வேறு பகுதிகளிலும் அவர்கள் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இரு சாராருக்கும் அண்மையில் வெளிநாட்டு ஆயுத உதவி அளிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியைத்தொடர்ந்தே, இப்போது கடும் சண்டைநடைபெறுவதாகத் தகவல்கள் வந்துள்ளன.

## மிருகவைத்தியசாலைக்கு ரூபா. 20,000

புன்னாலைக்கட்டுவன், வியாழன்

உடுப்பிட்டிப் பகுதிக்கான மிருகவைத்தியசாலைக் கட்டடத்துக்காக ரூபா 20,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான வசதியான நிலம் வாங்கப்பட்டதும் கட்டட வேலைகள் ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

# சுதந்திரமாகச் செய்திகள் வெளியிட ஒத்துழைப்பு

## இந்திய பத்திரிகை சபை மாநாட்டில் வேண்டுகோள்

பங்களூர், டிச. 28

பங்களூரில் நேற்றுக்கூடிய இந்திய பத்திரிகைச் சபை, எவ்வித பயமுறுத்தலுமின்றி சுதந்திரமாகச் செய்திகளை வெளியிடப் பத்திரிகைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு பொது மக்களையும், நாட்டிலுள்ள ராஜ்ய அரசாங்கங்கள் அனைத்தையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

சில ராஜ்யங்களில் பத்திரிகையாளர் செய்திகளைச் சுதந்திரமாக வெளியிடுவதற்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ள சம்பவங்களைப் பற்றியும் சபை குறிப்பிட்டது.

# இந்தியநடனம்பழகும் அமெரிக்க இளைஞர்கள்

நியூயோர்க்,டிச.28

அமெரிக்க இளைஞர்கள் இந்திய நடனங்களைப் பயில்வதில் இப்பொழுது அதிக சிரத்தை காட்டத்தொடங்கியிருக்கின்றனர். இப்பொழுது அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருக்கும் நடனத் தம்பதிகளிடம் அநேக மாணவர்கள் பயிற்சிபெற்று வருகின்றனர்.

கிருஷ்ண ராவ் என்பவரும் அவருடையமனைவி சந்திரபாகா தேவியும் இப்பொழுது அமெரிக்காவில் நியூயோர்க்கிலிருக்கும் இந்தோ—அமெரிக்க நடனக் கம்பெனி இளைஞர்களைப் பயிற்றுவித்து வருகின்றனர். இத் தம்பதிகளுடன் நடனக்குழுவொன்றும் அமெரிக்காவில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறது. இக்குழுவினரின் வெவ்வேறு நடனங்கள்அண்மையில் மேடையேற்றப்பட்டன. ஆசிய கழகத்தில் இந்த நடனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நடனம் முடிந்ததும் ராவ் பத்திரிகையாளர்களுடன் உரையாடினார். 'அமெரிக்க இளைஞர்கள் மிகவும் ஊக்கமாக என்னிடம் பாடம் கற்று வருகின்றனர். நாங்கள் இப்பொழுது தயாரித்துக்கொண்டுவரும் நாட்டிய நாடகம் அமெரிக்காவில் மிகுந்தசெல்வாக்குப்பெறும் என்று நான் நம்புகிறேன். இந்நாடகத்தில் அமெரிக்க இளைஞர்களே நடிக்கப் போகின்றனர்' என்று அவர் கூறினார்.

''இந்திய நாடகங்கள் பெரும்பாலும் மத சார்புடையனவாகவே இருந்து வருவது இயல்பாகிவிட்டது. தசாவதாரம், கீத கோவிந்தம் போன்ற நாட்டிய நாடகங்களை எங்களுடைய நாடகக் குழு தயாரித்திருக்கிறது. இவற்றுக்கு இப்பொழுது எங்கும் நல்ல கிராக்கி இருக்கிறது'' என்று ராவ் கூறினார். இவர்களுடைய நாட்டிய நாடகங்களுக்கு வேண்டிய இசையை ஏற்கனவே இந்தியாவிலேயே பதிவு செய்து கொண்டு வந்திருக்கின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஐரோப்பாவின் பல பாகங்களுக்கும் இத்தம்பதிகள் சென்று நாட்டிய விருந்துகளை அளித்திருக்கின்றனர். நடனங்களை பற்றிய பல சொற்பொழிவுகளையும் நடாத்தியிருக்கின்றனர். மைசூர் அரசாங்கம் இவர்களுடைய சுற்றுப் பயணத்துக்கு வேண்டிய ஒத்தாசைகளைச் செய்து கொடுத்திருக்கிறது.

ராவ் தம்பதிகள் அமெரிக்காவில் இன்னும் மூன்று மாதங்கள் தங்கியிருப்பார்கள். அமெரிக்காவின் பல பாகங்களுக்கும் சென்று இவர்கள் நடனக் கச்சேரிகள் செய்வதுடன், சொற்பொழிவுகளும் ஆற்றுவார்கள்.

# தென்னாபிரிக்காவில் டாக்டர்கள் அரிய சாதனை நிலைநாட்டினர்

கேப்டவுண்,டிசெ. 28

தென்னாபிரிக்காவிலுள்ள கிழக்கு லண்டன் என்னும் இடத்தில் உள்ள உள்ளூர் ஆஸ்பத்திரி ஒன்றில் ஓர் அதிசயமான சத்திரசிகிச்சையை அந்த ஆஸ்பத்திரி டாக்டர்கள் ஆற்றியுள்ளனர்.

ஒரு ரயிலின் முன்பக்கத்துக்கும், ஒரு லொறியின் முன்பக்கத்துக்குமிடை வே அகப்பட்டுநசுங்கிய டேர்க்சி என்ற மனிதனின் உடலை இடுப்பிலிருந்து அகற்றிச் சத்திரசிகிச்சை செய்துள்ளனர். இந்தச் சத்திரசிகிச்சை 5 மணிநேரம் நீடித்தது.

டேர்க்கிக்கு இப்போது செயற்கை உறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

## மதகை திருத்தவும்

கொழும்பு, வியாழன்

அண்மையில் யாழ்ப்பாணத்தில் பெய்த அடைமழையினால் உடைந்தநாவற்குழி மதகைத் திருத்தி அமைக்கவேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு வடபகுதி பொதுமராமத்து இலாகா இன்ஜினியரையும், பொதுமராமத்து இலாகா தலைமைக் காரியாலயத்தையும் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் வேண்டியுள்ளார்.

இம் மதகே வடபகுதிக்கு மிகமுக்கியமானதாகவிருப்பதாகவும் தெரிவித்த இவர் இதனால் கோப்பாய்க்கூடாக யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு அப்பால் செல்லும் பஸ் பிரயாணிகளிடம் 25 சதம் மேலதிகமாக அறவிடப்படக்கூடாதென்றும்தெரிவித்துள்ளார்.

அன்றாட வாழ்க்கைச்செலவுக்கே மக்கள் அவலப்படும் இவ்வேளையில், இது அநீதியென்றும் இவர் சுட்டிக் காட்டியதோடு, உடனடியாக நாவற்குழி மதகைத் திருத்திஅமைத்து மீண்டும் இப் பாதையில் பஸ் சேவையை நடத்த வழி வகுக்கவேண்டுமெனக் கேட்டுள்ளார். [ந. நி]

5-ம் வகுப்பு

## பரீட்சை முடிவு இந்தவாரம்

உரும்பராய், வியாழன்

வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினால் சென்ற நவம்பர் மாதத்தில் நடாத்தப்பெற்ற 5-ம் வகுப்புப் பரீட்சை முடிவுகள் இந்த வார இறுதியில் வெளியாக இருக்கின்றன.

பிரபல கல்லூரிகள் உட்பட 500க்கு மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து பத்தாயிரம் மாணவர்களுக்கு மேல் இப்பரீட்சைக்குத் தோற்றினர்.

## செனட் சபையில்..

கொழும்பு, செவ்.

செனட்டர் லொறேருல்-

இடதுசாரித் தலைவர்கள் தாம் இன்னும் இரண்டு மாதத்தில் ஆட்சிக்கு வந்து விடுவதாகக் கூறித்திரிகிறார்கள். இது 'யானையும் குருடர்களையும்' போன்ற கதைதான்.

தேசிய அரசாங்கம் ஒரு யானை. இடதுசாரியினர் குருடர்கள். இவர்களுக்கு யானையைச் சரியாகத் தெரியாது. இதனால் யானையின் வால்களை இன்று பிடித்துக்கொண்டு கோஷமிடுகிறார்கள். இந்த யானை திரும்பி தும்பிக்கையால் தாக்கினால் தாம் என்னநிலை அடைவோம்என்பது இவர்களுக்கு இப்போது தெரியாது.

செனட்டர் நித்தியபாலா-

எதிர்க்கட்சியினர் அடிக்கடி பொதுத்தேர்தல் வைக்குமாறும், தங்களுடன் போட்டியிட வருமாறும் மேடைகளில் அழைக்கிறார்கள். இவர்களின் விருப்பப்படி என்றால் தினமும் தேர்தல் நடத்த வேண்டும் போலவிருக்கின்றது. இது எப்படி முடியும்? ஜனநாயக நாடுகளில் 5 வருடத்துக்கொருமுறைதானே தேர்தல் நடத்தமுடியும்.

செனட்டர் டிக்ஸன் சில்வா-

'தவஸ' பத்திரிகை பொய்ப்பிரசாரம் செய்வதாக செனட்டர் நித்தியபாலா தெரிவித்தார். அரசாங்க கட்சியினரே அன்று பத்திரிகைகளைப் பாராட்டி ஆட்சிக்கு வந்தனர். இன்று அவைகளை அழிக்க முற்படுகின்றனர்.


"ராணே"

உங்கள் சொகுசுக்கேற்ற சாமான்கள்

O ஸ்பிரிங் கட்டில் பிரேம்கள், எல்லா அளவிலும்



O டிலக்ஸ் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
O டிலைட் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
O ஆஸ்பத்திரி கட்டில்கள்
O டாக்டர் பரிசோதனை கட்டில்கள்
O ஆஸ்பத்திரி தூங்கு கட்டில்கள்
O பஞ்சு - தும்புமெத்தைகள்
O ஸ்பிரிங் மெத்தைகள்
O குழந்தை தொட்டில்
O மெத்தை ஸ்பிரிங்குகள்
O திரைகள்
O சுப்பர் லக்ஸ் கட்டில்கள்

முதலியன

மேற்கொண்டு விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ஏகவிநியோகஸ்தர்கள்

த பர்மா டீக் ட்ரேடிங் கம்பனி, லிமிட்டெட்,

62, புளூமெண்டால் ரேட்,

கொழும்பு-13.

தொலைபேசி: 2233/34


# இஸ்ரேல்-ஜோர்தான் துருப்புகள் ஒரு மணி நேரம் மோதின

டெல் அவிவ், டிச, 28

நேற்று இஸ்ரேல்-ஜோர்தான் எல்லையில், இஸ்ரேலிய துருப்புகளுக்கும் ஜோர்தான் துருப்புகளுக்கும் ஒரு மணி நேரம் வரை துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதாக இஸ்ரேலிய வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

முதலில், ரோந்து சுற்றிய இஸ்ரேல் துருப்பினர் மீது ஜோர்தான் துருப்புகள் சுட்டதாகவும், அதற்குப் பதிலாகத் தாம் திருப்பிச் சுட்டதாகவும் அவை மேலும் தெரிவித்தன. இரு பக்கத்திலும்எவ்வித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை.

ஆனால், இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி, ஜோர்தான் பக்கத்திலிருந்து எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

இதற்கிடையில், நேற்று முன்தினம் ஜெருசலம் சென்றிருந்த மேற்கு ஆசிய விசேஷ ஐ. நா. பிரதிநிதி திரு. ஜாரிங், நேற்று கெயிரோ திரும்பினார். அவர் கெயிரோவில் ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

ஜெருசலத்தில் திரு. ஜாரிங், இஸ்ரேலிய வெளியுறவு மந்திரி திரு. எபானைச் சந்தித்துப் பேசினார். அவர் திரும்பவும் ஜெருசலம் செல்லவிருக்கிறார்.

## சேவைக்கு பாராட்டு

அநுராதபுரம், வியாழன்

ஐம்பது ஆண்டுகளாக வழக்கறிஞராகக் கடமையாற்றிய திரு. சம்பந்தரைக் கௌரவிக்குமுகமாக நுவரவீவா வாடிவீட்டில் வழக்கறிஞர், நீதிபதிகள் ஆகியோர் சேர்ந்து ஒரு தேநீர் விருந்துபசாரம் அளித்தனர்.

திரு. சம்பந்தர் ஸ்ரீகதிரேசன் ஆலய தர்மகத்தாக்கள் சபை தலைவராகவும் விவேகானந்தா சபையின் தலைவராகவும் இருந்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பண்டிதருக்கு சிங்களக் கடிதம்

புலோலி, வியாழன்

''இலங்கைப் பண்டிதர் சங்கப் பொதுச்செயலாளர் ஒருவருக்கு அண்மையில் வருமானவரிக் கந்தோரில் இருந்து வந்த கடிதங்கள் எல்லாம் சிங்களத்தில் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலமும், சிங்களமும் தெரியாத தமிழ் தெரிந்த வருமானவரி செலுத்துவோர் அக் கடிதங்களில் உள்ள விஷயங்களை எப்படி அறிந்துகொள்ள முடியுமென இவர் கேட்கிறார்.

தமிழிலேயே கடிதங்கள் எழுதவும் என வருமான வரி இலாகாவை வேண்டியும் அவர்கள் மேற்படி விஷயம்பற்றி கவனம் செலுத்தாதிருப்பது கவலையளிப்பதாக இவர் தெரிவித்தார். இதுசம்பந்தமாக உடுப்பிட்டி எம். பி. திரு. [illegible] புகார்செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ்சேவை பற்றி கோரிக்கை

பூநகரி, வியாழன்

பூநகரிக்கு போதிய பஸ் சேவையை அமைத்து மக்களின் அவல நிலையை போக்கும்படி பூநகரி தமிழரசுக் கட்சி வாலிப முன்னனிச் செயலாளர் திரு. எஸ். தனபாலசிங்கம், கிளிநொச்சித் தொகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தையும், யாழ். இ. போ. ச. முகாமையாளரையும் கேட்டுள்ளார்.

## பூநகரி மக்கள் குறைபாடு

பூநகரி, வியாழன்

பூநகரிப்பகுதியிலுள்ளவீதிகள் சீர் கேடாக இருப்பதாயும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட ரோட்டுக்கள் இன்னும் திருத்தப்படவில்லையெனவும் நீரினுல் அரிக்கப்பட்டு தார் அள்ளிய இடங்களுக்கு கல்லுப்போடாமல் மண்மட்டும் போட்டு மூடப்பட்டிருப்பதாயும் இதனுல் பயனேற்படாதென்றும் உடனடியாக இதை மேற்பார்வை செய்யும்படியும் வடமாகாண பகிரங்க வேலைப்பகுதிப் பொறுப்பதிகாரிக்குப் பூநகரிப்பகுதி மக்கள் ஒரு மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

## வர்த்தகர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

சாவகச்சேரி சந்தையிலுள்ள கடையொன்றில் வெளிநாட்டிலிருந்துஇறக்குமதிசெய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஒருமூடை பச்சை அரிசி விலைக் கட்டுப்பாட்டதிகாரி திரு. சிறில் எதிர்சூரியாவினுல் கைப்பற்றப்பட்டது.

இந்த அரிசியைப் பதுக்கி வைத்திருந்ததாகக் கூறப்படும் கடைச் சொந்தக்காரர் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. அரிசிமூடை சாவகச்சேரி கூட்டுறவு யூனியனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## வெளிநடப்பு

சங்கானை, வியாழன்

சங்கானை பட்டினசபைக்குள் வைத்து இறைவரிமேற்பார்வையாளரை மேற்படி பட்டினசபை அங்கத்தவர் ஒருவர் அவதூருகப் பேசியதையிட்டு பட்டினசபை சகல ஊழியர்களும் வெளிநடப்புச்செய்தனர்.

சபைத்தலைவர் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகஅளித்த வாக்குறுதியை ஏற்றுக்கொண்ட ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினர்.

## நெடுந்தீவு சமூகமுன்னேற்ற சங்கம்

கொழும்பு, வியாழன்

நெடுந்தீவு சமூகமுன்னேற்றச் சங்க 7-ம் ஆண்டுக் கூட்டம் சங்கப்பணி மனையில் திரு. பி அல்பிறட் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் சாதனைகள் பற்றி திரு. சு. கணபதிப்பிள்ளை பேசுகையில் நெடுந்தீவிலுள்ள அத்தியாவசிய தேவைகள் பற்றி ஏற்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் சங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துவந்துள்ளதாக கூறினுர்.

உத்தியோகத்தர் விபரம் வருமாறு:-

காப்பாளர் காரியதரிசி: திரு. வேல்நம்பி, தலைவர்: திரு. சி. கணபதிப்பிள்ளை உபதலைவர்: திரு. சூ. பாக்கியநாதன், பொதுச்செயலாளர்: திரு, சு. கணபதிப்பிள்ளை, உப செயலாளர்: திரு. எல். பிலேந்திரன், பொருளாளர் திரு. ப. பிராஞ்சிஸ் சேவியர், உப பொருளாளர்: திரு. க. கோபால், கணக்குப் பரிசோதகர். திரு. பி. அல்பிறட்.

## "விதை உருளைக்கிழங்கு உடனடியாக அனுப்பவும்"

கொழும்பு, வியாழன்

யாழ்ப்பாணத்து விவசாயிகளுக்கு உடனடியாக இலவச விதை உருளைக் கிழங்குகளை வழங்குமாறு உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டாரவை நல்லூர்த் தொகுதி எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன் அவசர தந்திமூலம் வேண்டியுள்ளார்.

டாக்டர் நாகநாதன் இத்தந்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"அண்மையில் யாழ்ப்பாணத்தில் பெய்த பெருமழை காரணமாக இப்பகுதியில் பல்லாயிரக்கணக்காகப் பயிரிடப்பட்டிருந்த உருளைக் கிழங்குகள் சேதமடைந்து விட்டன. எனவே இப்பகுதி விவசாயிகளிடமிருந்து பணம் அறவிடாமல் உயர் ரக விதை உருளைக்கிழங்குகளை வழங்கவேண்டும்."

இதன்பிரதியொன்று வடபகுதிஅரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## காரினுள் இருந்தது?

சாவகச்சேரி, வியாழன்

வீதியில் சென்ற காரைச் சந்தேகத்தின்பேரில் சோதனைசெய்த பொலிசார் காரினுள் 60 போத்தல் சாராயம் இருக்கக் கண்டுபிடித்தனர்.

முருகண்டி பிரதானவீதியில் வைத்து கிளிநொச்சிப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட அக்காரும் கார்ச்சாரதி வின்சென்டிப்போல், எஸ். தியாகராசா, அம்புறாக்ஜெருஜி, ஏ. செல்வரத்தினம், ஏ. முத்துலிங்கம் ஆகிய ஐவரும் கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சி மாஜிஸ்திரேட் திரு. கே.விக்கினராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மாஜிஸ்திரேட் ரூபா 500 அபராதம் விதித்துத்தீர்ப்பளித்தார்.

## சனசமூகநிலைய கூட்டம்

ஊர்காவற்றுறை, வியா.

சரவணை கிராமமுன்னேற்றச் சங்கத்தின் பூர்த்தியாகாமலிருந்த பல பணிகள் பூர்த்தியாக்கப்பெற்று புனருத்தாரணக் கூட்டம் சரவணை சனசமூக நிலையத்தினரால் நடத்தப் பட்டது.

சரவணைக் கிராமசேவையாளர் திரு. தளையசிங்கம் புனருத்தாரண வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

முதலாம் வட்டார கிராம சங்க உறுப்பினர் திரு. நகுலேசபிள்ளை தமது வரவேற்புரையில் கிராமசேவையாளராக கடமையாற்றும் திரு தளையசிங்கம் தமது குறுகிய பதவிக்காலத்தில் ஆற்றிய சேவைக்கு நன்றி பாராட்டினுர்.

திரு. கு. கணேசலிங்கம் திரு. க. இ, கந்தையா ஆகியோரும் பேசினர். கிராம சேவையாளர் திரு. தளையசிங்கத்தை பாராட்டுமுகமாக அன்னுருக்கு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. நிலையக் காரியதரிசி திரு. பத்மநாதன் நன்றி கூறினுர்.

## சேதங்கள் திருத்தப்படவில்லை

சங்கானை, வியாழன்

வலி. மேற்குப் பகுதியில் காரைநகர் - யாழ்ப்பாணம் வீதியில் உள்ள மதகுகளில் ஏற்பட்ட சேதங்கள் இதுவரை திருத்தப்படவில்லை. அபாயத்தை விளைவிக்கக்கூடிய கிடங்குகளுக்கு தகுந்த பாதுகாப்போ அல்லது அபாய அறிவிப்போ இல்லாததால் பலர் விபத்துக்குள்ளாகவேண்டி நேரிடுகிறது.

நேற்றுமுன்தினம்சக்கிளில் சென்றுகொண்டிருந்த பிரயாணி ஒருவர் இக்கிடங்கில் வீழ்ந்து படுகாயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

இதுபோன்ற சம்பவங்கள் தினமும் இவ்வீதியில் நடைபெற்றுவருகிறது.

## புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, வியா.

சரவணை—வேலணை மேற்குப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. நா. நடராசா (ஆசிரியர்), கௌரவ காரியதரிசி, திரு. சு. நமசிவாயம் [ஆசிரியர்] பன்னிரண்டு பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.


# விற்பனை ஏஜண்டுகள்

முன் எப்பொழுதும் இல்லாத மிகப் பரந்த அளவில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப் பெறவிருக்கும் "ஜாதிக சம்பத" சீட்டிழுப்புக்கான ரூபா 2/- விலையுள்ள டிக்கெற்றுகளை விற்பனைசெய்ய விரும்பும் பொது நலச்சங்கங்கள், சபைகள். தாபனங்களிடமிருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முதலில் ஆகக்குறைந்தது 100 டிக்கெற்றுகளையாவது பணங்கொடுத்து வாங்குவதற்கு ஆயத்தமானோர் மட்டும் பின்வரும் விபரங்களைக்காட்டி விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்:

(அ) பெயரும் முகவரியும்:

(ஆ) பாராளுமன்றத் தொகுதி:

(இ) இப்போதைய தொழிலும் வருமானமும்:

(ஈ) விற்பனைக்களத்தில் வாழ்ந்த அல்லது தொழில் புரிந்த காலம்:

(உ) விண்ணப்பகாரரைப்பற்றி விசாரித்தறிய இருவர் பெயரும் முகவரியும்:

(ஊ) 'ஜாதிக சம்பத' டிக்கெற்றுகள்எங்ஙனம் விற்பனை செய்யப்படும் என்பது பற்றிய விவரச் சுருக்கம்

நியமிக்கப்பட்ட விற்பனை ஏஜண்டுகளுக்கு 12 சதவீதமான கமிஷன் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் தேதி பிற்பகல் 4-30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்களை அனுப்புவோர், கடித மேலுறையின் இடதுபக்கமேல் மூலையில் 'ஜாதிக சம்பத' என்று எழுதி அனுப்புதல் வேண்டும்.

பொது மேலாளர்,
தேசிய லொத்தர்ச் சபை,
502/1 காலி வீதி,
கொழும்பு 3.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்கண்டான்

வழங்கும்

## ரூ. 1000-00

## பெறுமதியான 168 பரிசுகள்

**சித்திர கலா-** என்ற சொல்லில் சித்திரமும் கலையும் பிணைந்திருக்கின்றன. அத்தோடு மெய்கண்டான் வெளியிடும் மற்றொருபுதிய கலண்டரான சித்திர கலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரையும் இது குறிக்கும்.

**குருபரன்-** என்ற பதத்தில் லீலா விநோதனன பரனுக்கு குருவாகிய குமரன் என்ற பொருள் பொதிந்திருக்கிறது. அத்தோடு மெய்கண்டான் வெளியிடும் மற்றுமொரு சிறிய சைஸ் பஞ்சாங்க சித்திரக் கலண்டரையும் இது குறிக்கும்.

தமிழுலகில் முதன் முதல் சித்திர சகிதமான திருக்குறட் கலண்டர்களை வெளியிட்டு வெற்றிகரமாக விற்பனை செய்து வருபவர்கள் மெய்கண்டான் ஸ்தாபனத்தார்.

மெய்கண்டான் திருக்குறட் கலண்டரில் சமய ஞானிகள், உத்தமப் பெரியார்கள், தெய்வப் புலவர்கள், தேசத் தியாகிகள் போன்றோரின் சித்திரங்களே இடம்பெற்று வருகின்றன. அறிஞர்களின், பெரியோர்களின், பிரமுகர்களின் தரத்திற்கேற்பவே மெய்கண்டான் திருக்குறட்கலண்டர்களில் படங்கள் பொறிக்கப்படுகின்றன.

இது தவிர

முழுக்க முழுக்க, பக்கத்துக்குப்பக்கம், சித்திரங்களைக் கொண்ட [நம்பர்2, நம்பர்3] தனிச் சித்திரக் கலண்டர்களாக மலிவு விலையில், இரண்டு புதிய கலண்டர்களையும் இவ்வாண்டு முதல்வெளியிடுகிறார்கள் மெய்கண்டான் ஸ்தாபனத்தார்.

விவரங்களைத் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா? இப்போது இங்கு தரப்படும் வினாவுக்கு ஏற்ற விடையைத் தெரிந்தனுப்பி பரிசைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**வினா: "சித்திரகலா"—"குருபரன்" என்ற அழகிய சொற்களை மெய்கண்டான் ஸ்தாபனத்தார் பிரயோகித்தால் அவை எதைக் குறிக்கும்?**

கீழே தரப்பட்டிருக்கும் 6 விடைகளில் பொருத்தமான 2 விடைகளை ஒரு போஸ்கார்ட்டில் எழுதி அனுப்பி வையுங்கள்.

விடை 1. சித்திர கலா — ஒரு நடிகையின் பெயர்.
விடை 2. சித்திர கலா — ஒரு நடன மன்றத்தின் பெயர்.
விடை 3. சித்திர கலா — மெய்கண்டான் ஸ்தாபனம் வெளியிடும் சித்திரங்களும் கலையம்சங்களும் நிறைந்த ஒரு புதிய பெரிய "சைஸ்" கலண்டரின் பெயர்.
விடை 4. குருபரன் — பழநி முருகனின் திருப்பெயர்.
விடை 5. குருபரன் — ஒரு தமிழ்ப் பத்திரிகையின் பெயர்.
விடை 6. குருபரன் — மெய்கண்டான் ஸ்தாபனம் வெளியிடும் சித்திரங்களும் கலையம்சங்களும் நிறைந்த ஒரு புதிய சிறிய "சைஸ்" மலிவு விலைக் கலண்டரின் பெயர்.

## பரிசு விவரங்கள்

1 ம் பரிசு ரூ. 100.00 ரொக்கம்
2 ம் பரிசு ரூ. 50.00 ரொக்கம்
3 ம் பரிசு ரூ. 25.00 ரொக்கம்

மற்றும் 165 பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5/- பெறுமதியான பொருட்கள்.

சரியான விடை அனுப்புபவர்களின் பெயர்கள் குலுக்கி எடுத்துப் பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெறுபவர் விவரம் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

**மெய்கண்டான் பிரஸ் லிமிட்**
161, செட்டியார் தெரு,
தொலைபேசி: 79141 கொழும்பு-11.


## மயிலிட்டி வென்றது

காங்கேசந்துறை, வியா

மயிலிட்டி கண்ணகி படிப்பகம் - வீரமாணிக்கதேவன் துறை மூன்றும்பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் காங்கேசன்துறை விளையாட்டுக்கழக மூன்றும் பிரிவினருக்குமிடையில் காங்கேசன் துறையில் நடைபெற்ற போட்டியில் 4-1 கோல்களால் மயிலிட்டி கோஷ்டி வெற்றியீட்டியது.

மயிலிட்டியில் இதே கோஷ்டியினரிடையே நடைபெற்ற போட்டியில் 1-0 கோல்களால் மயிலிட்டி வெற்றியீட்டியது. இரு முறையிலும் மயிலிட்டி கண்ணகி படிப்பக விளையாட்டுக் கோஷ்டியினர் வெற்றி பெற்றனர்.

## நாவலர்கழகம் வென்றது

சங்கானை, வியாழன்

இளவாலை சென் ஹென்றி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற வலி-மேற்கு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மாதகல் யுனைட்டெட் விளையாட்டுக் கழகமும் நாவலர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

பலத்த மோதல்களுக்கு இடையே நடைபெற்ற இப் போட்டியில் நாவலர் கழகம் 3—1 கோல்களைப் போட்டு வெற்றியீட்டியது.

## ஒரு கோலால் வெற்றி

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பு வளர்பிறை விளையாட்டுக் கழகத்திற்கும் சிலாவத்தை விளையாட்டுக் கழகத்துக்கும்இடையே நடந்த கிளித்தட்டுப் போட்டியில் வளர்பிறை விளையாட்டுக் கழகத்தினர் 3-2 ஆட்டங்கள் மூலம் வெற்றி பெற்றனர். முல்லைத்தீவு விளையாட்டுப் போதனாசிரியர் திரு. என், தியாகராசா மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

## றெயின்போஸ் வெற்றி

புன்னாலைக்கட்டுவன், வியாழன்

அல்வாய் மனோகரா கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வல்வை றெயின்போஸ் வல்வை உதயசூரியன் பீ கோஷ்டியை 5-2 கோல்களால் தோற்கடித்தது.

திரு. எஸ், கமலநாதன் மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

## 'தனியார்துறையுடன் ஆலோசிக்கவேண்டும்'

காலி, வியாழன்

'ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்கம் நாணய மதிப்புக் குறைப்புச்செய்வதற்கு முன் தனியார்துறையுடனும் தொழிற் சங்கங்களுடனும் கலந்து ஆலோசிக்கவேண்டும்' என இலங்கைத்தோட்ட முதலாளிமார் சங்கத் தலைவர் திரு. பேட்டிவருசவிதான தென்மாகாண தோட்ட முதலாளிமார் சங்கக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

'தேயிலையின் விலை உயர்ந்துள்ளதாலும் தொழிலாளர் சம்பளம் இதனைவிட அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும் மற்றப்பொருள்களின் விலை அதிகரித்துள்ளதாலும் தோட்டமுதலாளிகள் லாபம்பெறமுடியாதநிலை நிலவுகிறதென அவர் மேலும் கூறினார். திரு. எஸ். எஸ். பெரேரா இக் கூட்டத்துக்கு தலைமைதாங்கினார்.


# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

லொறி

33 ஸ்ரீ மொடல் லோட் மாஸ்ரர் லொறி நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. கீழ்க் கண்டவிலாசத்தில் பார்வையிடலாம். வி. தம்பையா, கொன்ருக்டர், வட்டுக் கோட்டை மேற்கு. 2016

வீடும் வளவும்

அல்வாய் தெற்கு குமிளடிப்பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக 20 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குள்ளது. விபரங்களுக்கு: இ. இரத்தினநாயகம், 171, கோவில் றோட், நல்லூர். 2594

கடைக்குத் தேவையான கண்ணாடி அலுமாரிகள் 2 [10 அடி நீளம்] கண்ணாடி சோகேஸ்கள்இரண்டு. கவண்டர் ஒன்றும் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். மாத்தறை பேக்கவுஸ், கே. கே எஸ். றோட், சுன்னாகம். 2595

வீடு

யாழ்ப்பாணம். நன்றாக கட்டப்பெற்ற விஸ்தாரமான ஐந்து அறைகள் இருபக்கம் றோட்டுக்களை முகப்பாக கொண்டவை. முதலாம் குறுக்குத்தெருவும் பாங்ஷல் வீதியும் பிரிவினை உறுதி விலைகேட்கவும்: தொடர்புகொள்க. S. நாகலிங்க முதலி, பிரக்கிராசியாரும் நொத்தாரிசும், பருத்தித்துறை. 2017

### இலவசம்

மில்க்வைற் பார் சோப் மேலுறைகள் ஐந்து சேகரித்து தருபவர்களுக்கு 31-1-1968 வரை ஓர் அழகான காந்திய நீதிக் கலண்டர் இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 2007

### கல்வி

சிங்களம் ஆரம்ப முதல் க. பொ. த. சாதாரணம் வரை இலங்கை சிங்கள பட்டதாரியாலும் அனுபவமுள்ள தமிழ், முஸ்லீம் ஆசிரியர்களாலும் (காலை-மாலை) வகுப்புகளும், போயா தினமும் முதல்நாளும் விசேட வகுப்புகளும் நடாத்தப்படும். உடன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை, உடுப்பிட்டி. 2194


## நெல்லியடி வென்றது

புன்னாலைக்கட்டுவன், வியாழன்

அல்வாய் மனோகரா கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் நெல்லியடி ஸ்பேஸ்கழகமும், உடுப்பிட்டி இமையாணன் கோஷ்டியும் மோதிக்கொண்ட போது, நெல்லியடிக்கோஷ்டி 7-0 கோல்களால் மகத்தான வெற்றியீட்டியது

திரு. கே. கனகரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.




சிறந்த ஜெம்ஸன்
உங்களுக்கும்
உங்கள் மகனுக்கும்
சேட், காற்சட்டை (Trouser)

GEMSUN GARMENTS

X சுருங்காதது
X இறுக்கமானது உறுதியானது
X விசேஷ உறுதியான பொக்கட்டுகள்
X அளவும் திறமையும் ஒருபோதும் மாறாதது
X பிழையான வேலை இல்லை என்ற உத்தரவாதம்
X ஒவ்வொரு சிறந்த கடையிலும்கிடைக்கும்.

**வியாபாரிகள்**

வலிகாமம் கிழக்கு,
ப. நோ. கூ. ச. சமாஜம்,
நீர்வேலி.

யாழ்ப்பாணம்:
தொலராம்ஸ், பிரதானவீதி.
தயராம்ஸ், பிரதான வீதி.
பொகுமால்ஸ், பிரதானவீதி.

பின்வரும் இடங்களில் ஏஜெண்டுகள் தேவை

X திருக்கோணமலை
X மட்டக்களப்பு
X கல்முனை
X அம்பாறை
X மன்னார்
X காங்கேசன்துறை

வர்த்தக விசாரணைகள்:-
**லக்கிபைவ் இண்டஸ்றீஸ்**
155, பிரதான வீதி, கொழும்பு.
டெலிபோன்:- 3184
காற்சட்டை, அரைக்காற்சட்டை, சேட்டுகள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சார்ஜண்டின் அலட்சியம் கோர்ட் நடவடிக்கை

குரும்பசிட்டி, புதன் வட்டுக்கோட்டை வாசியான பொன்னம்பலம் நவரத்தினம் என்பவர் இவ்வருடம் ஜூன் மாதம் 14-ந் திகதி சபாபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை என்பவரது வீட்டு வளவுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து பயமுறுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு சங்கானைப் பொலிஸார் தொடர்ந்துள்ள வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எஸ். வேலுப்பிள்ளை சாட்சியமளித்ததையடுத்து எதிரிதரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். குறுக்குவிசாரணையின்போது சாட்சி தமது வீட்டு முன்புற வாயில் இரும்புக்கதவை எதிரிசேதப்படுத்தி நஷ்டம் விளைவித்துள்ளார் எனத் தெரிவித்தார். இக்கூற்றை உறுதிப்படுத்த நீதிபதி, வழக்கை நடாத்திய பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் சாட்சியின் மூதல் வாக்குமூலம் பதிவு செய்த ஏட்டைத் தரும்படி கேட்டார். பொலிஸ் அதிகாரி பதிவுஏடு நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படவில்லை எனக் கூறினார். இக்கட்டத்தில் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தபொலிஸ் சார்ஜண்டை ஆஜராகும்படி நீதிபதி கேட்டார். ஆனால் இவ்வழக்கில் முக்கிய சாட்சியான மேற்படி பொலிஸ் சார்ஜண்ட் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதுவித தகவலும் கொடுக்காதவாறு நீதிமன்றத்தை விட்டு வெளியேறிவிட்டதாக நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

பொலிஸ் சார்ஜண்டின் செய்கை நீதிமன்றத்தை அவமதிப்புச் செய்வது போன்றதாகக் குறிப்பிட்ட நீதிபதி இவரது செய்கை குறித்து வடமாகாண பொலிஸ் சுப்ரிண்டண்டுக்கு அறிவித்து விசாரணை நடாத்தப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டார். பதிவு ஏடு கொண்டுவரத் தவறியமை பற்றியும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

இக்கட்டத்தில் வழக்கு விசாரணையைத் நிறுத்தி எதிரியை விடுதலை செய்ய எதிரிதரப்பு வழக்கறிஞர் கோரினார். இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டு நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரி சார்பில் வழக்கறிஞர் எஸ். நடராசா, வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். இன்ஸ்பெக்டர் திரு. ஸி. டயஸ் வழக்கை நடாத்தினார்.


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.-ஜெமினி
நடித்த
முகராசி

REGAL JAFFNA
4-45, 7-00 & 9-45 P.M.
Jean Sorel & Lisa Gastoni
in
THE MAN WHO LAUGHS
[Eastmancolor] [Adultsonly]

2-வது வெற்றிவாரம்
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
விஜிதா [ஹட்டன்]
மொடேர்ன் [பதுளை]



சுந்தரராஜன்
ஏ.வி.எம். ராஜன்
முத்துராமன்



ஜெயலலிதா
நாகேஷ்
மற்றும்
பலர்
நடிக்கும்
மேஜர் சந்திரகாந்த்


இப்பத்திரிகை [illegible] ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மந்திகை ஆஸ்பத்திரியில்

# 'மால் மருகன்' என்ற பெயர் மால் முருகனாகியதாம்

உடுப்பிட்டி, புதன் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் பிறக்கும் பிள்ளைகளின் பெயர்கள் சரியாகப் பதிவுசெய்யப்படுவதில்லையென்றும், தாய்தந்தையர்களின் பெயர்கள் கூட மாற்றங்கட்குட்பட்டும், பிறப்புப்பத்திரங்களில் விபரங்கள் பிழையாகப் பதியப்படுகின்றனவென்றும் அறியப்படுகிறது.

கரணவாய் வடக்கு மூத்த விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த ஒருவரது, அண்மையில் பிறந்த "மால்மருகன்" எனப் பெயரிடப்பட்ட பிள்ளையின் பிறப்புச்சாட்சிப் பத்திரம் பெற்றோருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் அப் பத்திரத்தில் மால் மருகன் என்னும் அப் பிள்ளையின் பெயர் "மால் முருக"னாக மாறியிருந்தாம். அது மட்டுமல்ல தாய் தந்தையரின் பெயர்களும் மாறியிருந்ததாம். அப் பிள்ளையின் தந்தையான மயிலு அச்சுதரின் பெயர் பதியப்படவேண்டிய இடத்தில் மயிலு அச்சுதரின் தந்தையும், பிள்ளையின் பாட்டனாருமாகிய சபாபதி மயிலுவின் பெயர் பதியப்பட்டிருந்தாம். பிள்ளையின் தாயான திலகவதிக்கு அப் பத்திரத்தில் "திலகவதி" எனப் பெயர் சூட்டப்பட்டிருந்ததாம்.

இதுசம்பந்தமாகப் பெற்றோர் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு ஆஸ்பத்திரியில் உள்ள புத்தகத்தைப் பார்வையிட்டபொழுது அப் பிறப்புப் பதிவுப் புத்தகத்தில் விபரங்கள் யாவும் சரியாகப் பதியப்பட்டிருந்தனவாம். ஆஸ்பத்திரியிலிருந்து பதிவாளருக்கு அனுப்பப்பட்ட பட்டியலிலேயே இக் குளறுபடி ஏற்பட்டதாகவும் தெரிகிறது. ஆஸ்பத்திரியில்பதிவு செய்பவர்கள் தவறுதலாக பதிந்தமையினாலே இந்நிலை ஏற்பட்டது என்றும் தெரிகிறது.

தந்தி ஊழியர்

## மேலும் 25 பேர் திரும்பினர்

கொழும்பு, புதன் தோட்டப்பகுதியில் வேலை நிறுத்த நிலைமை அநேகமாகச் சாதாரண நிலையை அடைந்துவிட்டது. இன்றும் அநேக தோட்டங்களில் தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர். இப்பொழுது 12 ஆயிரம் தோட்டத் தொழிலாளர் மட்டுமேவேலை நிறுத்தம் செய்கின்றனர்.

இன்று மேலும் 25 தந்தித் தொடர்பு ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினர்கள்.

## முல்லைத்தீவு மிளகாய்

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணத்தில் பச்சை மிளகாய்க்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள கிராக்கியையையும், விலைஏற்றத்தையும் முன்னிட்டு, யாழ்ப்பாண மக்களின் பச்சைமிளகாய்த் தேவையை இப்பொழுது முல்லைத்தீவு மிளகாய் பயிர்ச் செய்கையாளர்கள் குறைந்த விலைக்குப் பூர்த்தி செய்வதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாண மக்களின் பச்சைமிளகாய் தட்டுப்பாட்டை நீக்கும்பொருட்டு யாழ்ப்பாண சந்தைப் பகுதியினர் முல்லைத்தீவு பச்சை மிளகாயைப்பெற்று தற்பொழுது குறைந்த விலைக்கு விற்பனை செய்துவருகின்றனர். வெளியிடங்களில் ருத்தல் 2 ரூபா 40 சதம்வரை விற்பனையாகிக்கொண்டிருக்கும் பச்சைமிளகாயை சந்தைப்பகுதியினர் ரூபா 1-70 சதத்திற்கு நேற்று விற்பனை செய்தனர், [வி. நி]


MANOHARA
JAFFNA
Daily at 10-30, & 4-45, 7-00 & 9-45 p.m.
Richard Burton & Elizabeth Taylor
in
WHO IS AFRAID Of VIRGINIA WOLF
[Adults Only]


# வானொலி (விசேஷ) நிகழ்ச்சிகள்

## வெள்ளி 29-12-67

### இலங்கை

காலை 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-30 தோத்திரப் பாடல்கள்-வேலுப்பிள்ளை சிவஞானம்.

பகல் 12-00 தொழிலாளர் வேளை.

மாலை 5-30 இளைஞர் மன்றம்.

இரவு 6-15 பஜனை—வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனிலிருந்து அஞ்சல், 7-30 பாட்டு—லட்சுமி நடராசன், 9-30 பேச்சு—டாக்டர் ரி. மயில்வாகனம், 9-45 உரைச்சித்திரம், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி 1

காலை 6-50 பக்திப்பாடல்—சூலமங்கலம் சகோதரிகள், 6-55 அறவுரை—டாக்டர் ஆ. சிதம்பரநாதன் செட்டியார், 7-30 காந்தி அஞ்சலி.

பகல் 1-00 மாதர் நிகழ்ச்சி-சென்னை அஞ்சல்.

இரவு 6-15 இசைவிழா—சென்னையிலிருந்து அஞ்சல், 8-00 இசைவிழா, 9-15 பேச்சு 'தமிழர் நாகரிகம்'-ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, 9-30 இசைவிழா, 10-35 இசைவிழா.

### சென்னை 1

காலை 6-35 அருள்வாக்கு, 7-30 காந்தி அஞ்சலி, 8-00 ராகம், தானம், பல்லவி—சி. சிட்டிபாபு வீணை, 9-15 பாட்டு— வி. விஜயா சேவாத்திரி.

பகல் 1-00 மாதர்நிகழ்ச்சி 'அன்பை'—இலக்கிய நாடகம்.

இரவு 6-15 இசைவிழா, 8-00 இசைவிழா, 9-15 குடும்பநலத்திட்டமும் விரிவுக் கல்வியும்—டாக்டர் ஜெகந்நாதன், 9-30 இசைவிழா.

## சோடா வியாபாரி கொலை

கொம்பனித்தெரு, வியா. கொம்பனித்தெருவில் சோடாவியாபாரம் செய்து வந்த துரைராஜா என்பவரின் மரணம் சம்பந்தமாக சோமசுந்தரம் என்பவரை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

மரணவிசாரணையில் சுப்பையா என்பவர் சாட்சியமளிக்கையில், காலஞ்சென்றவர் தனது தந்தை என்றும் இவருக்கும் சோமசுந்தரம் என்பவருக்கும் பலவருடகாலமாகபகையிருந்து வந்ததென்றும் கூறினார். விசாரணையின்பின் கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

### மியூசிக் அகடாமி

பிற்பகல் 1-30 மணி: யாழ்ப்பாணம் என். கே. பத்மநாதன், கோண்டாவில் வீ. ஏ. பாலகிருஸ்ணன் - நாகசுரம். வலங்கைமான் ஏ. சண்முகசுந்தரம், யாழ்ப்பாணம் வி. என். குமரகுரு - தவில்.

மாலை 3 மணி: டி. கே. கோவிந்தராவ் - பாட்டு, திருப்பாற் கடல் வீரராகவன் - வயலின், கிருஸ்னன் குட்டி - மிருதங்கம்.

மாலை 5-30 மணி: எம். பாலமுரலிகிருஷ்ணா - பாட்டு டி. கேசவலு - வயலின், தஞ்சாவூர் உபேந்திரன் - மிருதங்கம்.

இரவு 9-30 மணி: என். ரமணி - புல்லாங்குழல், கோ. வை. வி தெட்சணாமூர்த்தி - வயலின், வேலூர் இராமபற்றன் - மிருதங்கம்.

### தமிழிசை சங்கம்

மாலை 4 மணி: டி. வி. நமசிவாயம் - பாட்டு, சிக்கில் பாஸ்கரன் - பிடில், காரைக்குடி கிருஸ்னமூர்த்தி - மிருதங்கம்.

மாலை 6 மணி: மதுரை சோமசுந்தரம் - பாட்டு, லால்குடி ஜி. ஜெயராமன் - பிடில், ஸி. எஸ். முருகபூமதி - மிருதங்கம்' ஆலக்குடி இராமசந்திரன் - கடம், ஸி. கே. சியாம்சுந்தர் - கஞ்சிரா, புதுக்கோட்டை மகாதேவன்-முகர்சிங்.

இரவு 9-30 மணி: குமாரி வித்யாமூர்த்தி - பரதநாட்டியம்.

[அ. நி]

## இடமாற்றம்

புன்னாலைக்கட்டுவன், வியா. பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா ஆனைக்கோட்டைக்கு மாற்றப்பட்டுள்ளார். அவருடைய இடத்துக்கு மொறட்டுவ பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. பொக்சர் ஜயசூரியா மாற்றப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு. எஸ். மெண்டிஸ் உதவி இன்ஸ்பெக்டராகப் பருத்தித்துறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை சாஜன்ட் திரு. கே. அருணேந்திரம் பதுளைக்கும் திரு. கே. பெரேரா சவகாச்சேரிக்கும் மாற்றப்பட்டுள்ளார்.

## உடைமைகள் பறிமுதல்

சங்கானை, வியாழன் சங்கானைப் பட்டினசபை சேரிஒழிப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளில் இருப்பவர்கள் கடந்த இரண்டு மூன்று வருடங்களுக்கு மேலாக வாடகைப் பணத்தைக் கட்டத் தவறியதால் இவர்களின் அசைவுள்ள உடமைகளை பட்டினசபை இறைவரி வேலைகள் மேற்பார்வையாளர், சங்கானைப் பொலிஸார் உதவியுடனும் பட்டினசபை ஊழியர்கள் உதவியுடனும் நேற்று தற்காலிகமாக பறிமுதல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒருவார காலத்துக்குள் உரிய வாடகைப் பணத்தை செலுத்தத் தவறினால் இவ் உடமைகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமெனத் தெரியலருகிறது.


விற்பனைக்கு

கார்:
மொறிஸ் மைனர் E.L. ஏழாயிரம் தொடர்ச்சி. ஆசிரியரின் சொந்தப்பாவிப்பு. நேரில் வரவும்!— இரத்தினசிங்கம், உரும்பிராய்சந்தி.
2018


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org